# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
# DEPOSITIONS OF WITNESSES
# (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
# DEPOSITIONS OF WITNESSES P.W.15 (L.W.24)
# SC.NO.75/2018

| | | |
|---|---|---|
| **Name** | : | Thiru.Ramadas |
| **Father Name** | : | Laxmanan |
| **Occupation** | : | Rtd, Deputy Commissioner of Police |
| **Taluk** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 20.02.2026

அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம்: 12.30 p.m**

**முதல் விசாரணை–**

நான் சென்னை மாநகரத்தில் சென்னை மாநகர காவல் பணியில் காவல் துறை துணை ஆணையராக பணி செய்து ஓய்வு பெற்றுள்ளேன். வேலூர் மாவட்டத்தில் நான் கூடுதல் கண்காணிப்பாளராக 2006 ஆம் ஆண்டு முதல் 2009 வரை பணியில் இருந்தேன். பாகாயம் காவல் நிலைய குற்ற எண். 266/2006 தற்போது அரியூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வழக்கில் இதற்கு முன்பாக திரு. பார்த்தசாரதி துணை காவல் கண்காணிப்பாளர் புலன் விசாரணை செய்த வழக்கில் நான் மேல் விசாரணைக்கு எடுத்து கொண்டு சாட்சிகள் Ballistic Expert திரு.ராஜன் மற்றும் மருத்துவர் திரு.செந்தில்குமார், ராயப்பேட்டை அரசு மருத்துவமனை, உதவி அறுவை சிகிச்சை நிபுணர் என்பவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதில் மருத்துவர் செந்தில்குமார் மணி (எ) நடுபையன் என்பவருக்கு மேல் சிகிச்சைக்காக வந்தவரை IP No.838994 ல் அனுமதித்து சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்டிருந்த காயம் undisplaced fracture proximal 3rd of Tibia C foreign body inside என்ற காயத்திற்கு சிகிச்சை அளித்து 05.04.2006 அன்று டிஸ்சார்ஜ் செய்து மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று அளித்தார்.

மேற்படி வழக்கை புலன் விசாரணை செய்திருந்த திரு. பார்த்தசாரதி காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் கைப்பற்றி மாதிரிக்காக எடுக்கப்பட்ட தலா 350 மிலி நாட்டு சாராயம் கொண்டு 2 வெள்ளை நிற பாட்டில்கள் SHO Seal உடன் வாங்கியதாக பகுப்பாய்வுக்கு அனுப்பி வைப்பதற்காக படிவம் 95 மூலம் நீதிமன்றம் மூலமாக அனுப்பி வைத்தார். அந்த 2 பாட்டில்கள் **சா.பொ.7** (2 எண்ணிக்கை) ஆகும்.

அதே போல் சம்பவ இடத்தில் திரு. பார்த்தசாரதி காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களால் மாதிரிக்கு எடுக்கப்பட்ட ரத்தம் பட்ட மண் மற்றும் மாதிரிக்கு எடுக்கப்பட்ட ரத்தம் படாத மண்ணை கைப்பற்றி படிவம் 91 மூலம் கனம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். அவைகள் முறையே **சா.பொ.8 மற்றும் 9** ஆகும்.

அந்த மாதிரிக்கு எடுத்து அனுப்பப்பட்ட சாராயத்தை பகுப்பாய்வு செய்து நீதிமன்றத்திற்கு பெறப்பட்டது. அந்த பகுப்பாய்வு எண்.PRO.TOX No.488/2008 dated 27.05.2008 என்ற எண் கொண்ட அறிக்கை **அ.சா.ஆ. 16** ஆகும்.

அதன் பிறகு வழக்கில் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களை வழக்கு தொடர Sanction order in Dis No.C2/3224/2009 dated 16.02.2009 பெறப்பட்டு வழக்கில் விசாரணை முடித்து குற்ற பத்திரிக்கை பிரிவு 224,332,186,307r/w34 IPC, 4(1)(aaa) of TNP Act, 25(1-B)(a) of Arms Act 1985 படி எதிரிகள் மீது குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

<u>4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>

நான் மேற்சொன்ன 2 சாட்சிகளை தவிர்த்து வேறு எந்த சாட்சியையும் விசாரிக்கவில்லை என்றாலும் வாக்குமூலம் வாங்கவில்லை என்றாலும் சரிதான். நான் ஏற்கனவே வாக்குமூலம் கொடுத்தாக தயாரித்து வைக்கப்பட்டிருந்த வாக்குமூலங்களை பரிசீலனை செய்து அந்த சாட்சிகளை நேரடியாக விசாரணை செய்யாதனால் 4 வது எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்ற விவரம் எனக்கு தெரியவரவில்லை என்றால் சரியல்ல, நான்

விசாரிக்கவில்லை ஆனால் எனக்கு முன்பு இருந்த காவல் துணை கண்காணிப்பாளர் விசாரணை செய்ததால் நான் விசாரிக்கவில்லை. நான் சாட்சிகளை விசாரணை செய்த காவல் துணை கண்காணிப்பாளரை நான் விசாரித்தேனா என்றால் இல்லை, ஆனால் அவர் தயாரித்த கோப்பு ஆவணங்களை பரிசீலணை செய்தேன். காவல் துணை கண்காணிப்பாளர் எனக்கு தெரிந்தவர். அவர் செய்த வேலையை காப்பாற்றுதவற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 4 வது எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமுமில்லை என்றால் சரியல்ல. 4 வது எதிரி மீது தவறுதலாக குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆவணங்களை பார்த்து உண்மை தெரிந்து கொள்ள முடியாது என்றாலும் விசாரித்தால் தான் தெரியும் என்றாலும் சரியல்ல.

**1 மற்றும் 2 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

4 வது எதிரி தரப்பில்செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை அவ்வாறே ஏற்றுக்கொள்ளப்பட்டு கூடுதல் குறுக்கு விசாரணை கீழ்க்கண்டவாறு

நான் விசாரித்து வாக்குமூலம் வாங்கியதாக சொல்லப்பட்டது தவறு என்றாலும் நான் அவ்வாறு விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. ஆவணங்கள் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்த வித சம்மந்தமுமில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு புள்ளி விவரத்திற்காக தயாரிக்கப்பட்ட வழக்கு என்றாலும் காவல் துணை கண்காணிப்பாளரை காப்பாற்றுவதற்காக ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றாலும் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்: 01.05 p.m**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கைையெழுத்திட்டார்.

G SANTHI

Digitally signed by G SANTHI
Date: 2026.02.20 18:19:31 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,

வேலூர்